புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பு




▶ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பால் சாகித்திய புரஸ்கார் விருதாளர் மீனாட்சி பேசினார்.

காலாப்பட்டு, ஏப். 18: சாகித்ய அகாடமி மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக தமிழ்த்துறை இணைந்து தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பை நடத்தியது. பல்கலைக்கழக தமிழ்த்துறை கருத்தரங்க கூடத்தில் நேற்று இதன் தொடக்க விழாவில் சாகித்ய அகாடமி செயலாளர் சீனிவாசராவ் வரவேற்றார். பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி அறிமுக உரையாற்றினார். தென்னிந்திய சாகித்ய அகாடமி ஒருங்கிணைப்பாளர் மிருணாளினி தலைமை தாங்கினார்.

பால சாகித்திய புரஸ்கார் (தமிழ்) விருதாளர் மீனாட்சி சிறப்புரையாற்றினார். தொடக்க விழாவில் சாகித்திய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி எழுதிய சிறார் சிறுகதை நூல் 'காட்டுத் தாத்தா' என்ற தலைப்பில் தமிழிலும், 'பாதர் ஆப் திவுட்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும், 'கிராந் பேர் டுயூ புவா' தலைப்பில் பிரெஞ்சிலும் வெளியிடப்பட்டது. நூல்களை சாகித்ய அகாடமியின் செயலர் சீனுவாசராவ் வெளியிட்டு வாழ்த்தி பேசினார். புல முதன்மையர் சுடலைமுத்து நன்றி கூறினார்.

இந் நிகழ்வின் முதல் அமர்வில், சிறுகதை வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது. கன்னட எழுத்தாளர்கள் சுஜாதா, சபிதா, மீனாட்சி, பூர்ணிமா தம்மி ரெட்டி ஆகியோர் சிறுகதை வாசித்தனர். 2ம் அமர்வான கவிதை வாசிப்பில் மலையாள எழுத்தாளர் கனிமோள் தலைமை தாங்கினார். லட்சுமி கன்னட மொழியிலும், கவிஞர் இளம்பிறை தமிழ் மொழியிலும், ஜவலிதா தெலுங்கு மொழியிலும் கவிதை வாசித்தனர். முருகையன் நன்றி கூறினார்.